**ஆகஸ்ட் – 05**

# TNPSC துளிகள்

- 2026 ஆம் ஆண்டு கிளாஸ்கோவில் நடைபெற்ற காமன்வெல்த் விளையாட்டுப் போட்டியில் டெகாத்லான் பிரிவில் வெண்கலப் பதக்கம் வென்றதன் மூலம், காமன் வெல்த் போட்டிகளில் இப்பிரிவில் பதக்கம் வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையை தேஜஸ்வின் சங்கர் பெற்றுள்ளார்.
- கேரளாவின் விழிஞ்சியம் சர்வதேசத் துறைமுகமானது ஏற்றுமதி-இறக்குமதி (EXIM) சரக்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள, மத்திய மறைமுக வரிகள் மற்றும் சுங்க வாரியத்தால் (CBIC) சுங்கத் துறைமுகமாக அறிவிக்கப்பட்டுள்ளது.
  - 2024 ஆம் ஆண்டு ஜூலையில் தனது செயல்பாடுகளைத் தொடங்கிய இத்துறைமுகம், முன்னதாக கப்பல்களுக்கு இடையே சரக்கு பெட்டகங்களை மாற்றுவதற்கான சர்வதேச பரிமாற்ற மையமாக மட்டுமே செயல்பட்டது.
- இந்தியக் கடற்படையானது ஐந்தாவது மூழ்குப் பணி ஆதரவுக் கப்பலை (DSC A24) கொல்கத்தாவில் உள்ள திட்டாகர் ரயில் சிஸ்டம்ஸ் லிமிடெட் நிறுவனத்தில் (TRSL) அறிமுகப்படுத்தியது.
  - மூழ்குப் பணி ஆதரவுக் கப்பல்கள் (DSC) என்பவை கடலோர மற்றும் துறைமுகப் பகுதிகளில் நீருக்கடியில் மூழ்கும் செயல்பாடுகள், ஆய்வுகள், பழுதுபார்த்தல் மற்றும் மீட்பு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் சிறப்பு கப்பல்களாகும்.
- உத்தரப் பிரதேசத்தின் காசியில் (வாரணாசி) விக்சித் பாரத் சங்கல்ப் அபியானுக்கான நாஷா முக்த் யுவா என்ற 100 வாரகால நாடு தழுவிய போதைப் பொருள் தடுப்பு விழிப்புணர்வு பிரச்சாரத்தை பிரதமர் தொடங்கி வைத்தார்.
  - இப்பிரச்சாரம் முதன்முதலில் காசியில் சோதனைத் திட்டமாகத் தொடங்கப்பட்டு, பின்னர் காசி பிரகடனத்தின் (2025) கீழ் இந்தியா முழுவதும் விரிவுபடுத்தப்பட்டது.
- உலகெங்கிலும் உள்ள நிதித் தொழில்நுட்பத்தில் (FinTech) ஏற்படும் புதுமைகள் மற்றும் முன்னேற்றங்களை முன்னிலைப்படுத்துவதற்காக ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 1 ஆம் தேதி உலக நிதித் தொழில்நுட்ப தினம் அனுசரிக்கப்படுகிறது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## உடல் உறுப்பு தானத்திற்கான சிறந்த மாநில விருது - தமிழ்நாடு

- புதுடெல்லியில் நடைபெற்ற 16வது இந்திய உடல் உறுப்பு தான தின விழாவில், உடல் உறுப்பு தானத்திற்கான 'சிறந்த மாநில' விருதை தமிழ்நாடு பெற்றுள்ளது.
- மூளைச்சாவு அடைந்தவர்களின் உடல் உறுப்பு தானத்தில் மாநிலத்தின் சிறந்த செயல் பாட்டை அங்கீகரிக்கும் வகையில் மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தால் இவ்விருது வழங்கப்பட்டது.
- 2025 ஆம் ஆண்டில், தமிழ்நாட்டில் 266 பேர் இறந்த பிறகு உறுப்பு தானம் செய்துள்ளனர் மற்றும் 1,476 உறுப்புகள் மாற்று அறுவை சிகிச்சைக்கு வெற்றிகரமாகப் பயன்படுத்தப் பட்டுள்ளன.
- தமிழ்நாடு உடல் உறுப்பு மாற்று ஆணையமானது (TRANSTAN) 2008 ஆம் ஆண்டு முதல் இம்மாநிலத்தில் உடல் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சைகளை முறைப்படுத்தி, ஊக்குவித்து வருகிறது.
- இதயம் மற்றும் நுரையீரல் மாற்று அறுவை சிகிச்சையில் தமிழ்நாடு இந்தியாவில்

முதலிடத்தில் உள்ளது.

- மேலும், 2023 ஆம் ஆண்டு செப்டம்பர் முதல் 2026 ஆம் ஆண்டு ஜூலை வரை மூளைச் சாவு அடைந்த 798 கொடையாளர்களை அரசு மரியாதையுடன் சிறப்பித்துள்ளது.
- 2008 ஆம் ஆண்டு அக்டோபர் முதல் 2026 ஆம் ஆண்டு ஜூலை வரை, இறந்த 2,490 கொடையாளர்களிடமிருந்து உடல் உறுப்பு தானத்தை தமிழ்நாடு எளிதாக்கியுள்ளது, இதன் மூலம் 14,532 உறுப்புகள் மாற்று அறுவை சிகிச்சை செய்யப் பட்டுள்ளன.




## காவிரியின் நீர்வரத்து 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு சரிவு

The table shows the years when realisation of Cauvery water from Karnataka was poor* during July since 1974 (in thousand million cubic feet)

| YEAR | QUANTITY | ALLOCATION |
|---|---|---|
| 1976 | **4.285** | Not applicable |
| 1987 | **2.286** | Not applicable |
| 2002 | **7.234** | 42.76 (as per the interim order of the Cauvery Water Disputes Tribunal) |
| 2003 | **1.508** | 42.76 |
| 2010 | **6.719** | 42.76 |
| 2012 | **1.033** | 42.76 |
| 2017 | **7.273** | 34 (as per the final order of the Tribunal) |
| 2019 | **7.44** | 31.24 (after the SC's modification of the Tribunal's final order) |
| 2026 | **0.698** | 31.24 |



*The reference point is Mettur up to 2012 and Biligundulu for subsequent years*

- 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில், கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு மிகக் குறைந்த அளவிலான காவிரி நீரை தமிழ்நாடு பெற்றுள்ளது.
- ஜூலை மாதத்திற்கு ஒதுக்கப்பட்ட 31.24 டிஎம்சி (tmcft) நீருக்குப் பதிலாக, பிலிகுண்டுலுவில் 0.698 டிஎம்சி நீரை மட்டுமே மாநிலம் பெற்றுள்ளது.
- 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 2 நிலவரப்படி, பிலிகுண்டுலுவில் பெறப்பட்ட மொத்த காவிரி நீர் 3.687 டிஎம்சி ஆகும் (ஜூன்: 2.915 டிஎம்சி, ஜூலை: 0.698 டிஎம்சி, ஆகஸ்ட்: 0.074 டிஎம்சி).
- காவிரி நடுவர் மன்ற தீர்ப்பின்படி (உச்ச நீதிமன்றத்தால் திருத்தப்பட்டது), ஜூன்

மற்றும் ஜூலை மாதங்களில் தமிழ்நாடு 40.43 டிஎம்சி நீரைப் பெற்றிருக்க வேண்டும்.


- கர்நாடகா-தமிழ்நாடு எல்லையில் அமைந்துள்ள பிலிகுண்டுலு, 2013 ஆம் ஆண்டு முதல் அதிகாரப்பூர்வமாக காவிரி நீர் அளவிடப்படும் இடமாக இருந்து வருகிறது.

# தேசியச் செய்திகள்

## சேவை உற்பத்திக் குறியீட்டின் (ISP) துணைத் துறை அளவிலான சோதனைப் பதிப்பு வெளியீடு

- புள்ளி விவரம் மற்றும் திட்ட அமலாக்க அமைச்சகமானது (MoSPI), நாட்டின் சேவைத் துறையில் உள்ள 19 துணைத் துறைகளுக்கான முதல் சோதனை 'சேவை உற்பத்திக் குறியீட்டை' (ISP) வெளியிட்டுள்ளது.
- இது தற்போதுள்ள 'தொழில்துறை உற்பத்திக் குறியீட்டிற்கு' (IIP) இணையானதாக அமையும்.
- முறையான சேவைத் துறையில் நடைபெறும் குறுகிய காலச் செயல்பாடுகளை மாதந்தோறும் அளவிடும் முறையை இது முதன்முறையாக வழங்குகிறது.
- 2024-25 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்ட இந்தக் குறியீடு, 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்திற்கான தரவுகளை உள்ளடக்கியதுடன், இந்தியாவின் சேவைத் துறையில் சுமார் 60 சதவீதப் பங்களிப்பைக் கணக்கில் கொள்கிறது.
- இந்தியாவின் சேவைத் துறையை அளவிடும் முறையை மேம்படுத்துவதும், நாட்டின் புள்ளி விவர அமைப்பை வலுப்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.
- சோதனைத் தொடரின் நிலைத்தன்மையை மதிப்பீடு செய்து அதன் வரம்பை விரிவுபடுத்திய பிறகு, முழுமையான சேவை உற்பத்திக் குறியீடு அறிமுகப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது என்பதோடு முதல் கட்டத் தரவுகள் சேவைத் துறையில் பரவலான வளர்ச்சியைக் காட்டுகின்றன.
- காலப்போக்கில், சுகாதார சேவைகள் மற்றும் குடியிருப்பு உரிமை தொடர்பான வணிகங்கள் போன்ற துறைகளைச் சேர்ப்பதன் மூலம் இந்தக் குறியீட்டின் வரம்பு விரிவுபடுத்தப்படும்.
- இது பொருளாதாரத்தில் முறையான சேவைத் துறையின் பங்களிப்பில் சுமார் 85 முதல் 90 சதவீதம் வரையிலான வரம்பை எட்டச் செய்யும்.
- கடந்த ஆண்டின் இதே மாதத்துடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 19 துணைத் துறைகளில் 14 துறைகள் இரட்டை இலக்க வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன; அதேவேளையில், மீதமுள்ள கிட்டத்தட்ட அனைத்துத் துறைகளும் நேர்மறையான வளர்ச்சியையே பதிவு செய்துள்ளன.
- மிக வேகமாக வளர்ந்து வரும் துறைகளாக தங்குமிடம் மற்றும் உணவுச் சேவைகள் (37.2 சதவீதம்) மற்றும் சில்லறை வர்த்தகம் (30.8 சதவீதம்) ஆகியவை உள்ளன.
- தொழில்கள் அல்லது வணிகங்கள் மீது கூடுதல் இணக்கச் சுமையைச் சுமத்தாமல், அரசு அமைச்சகங்கள் மற்றும் ஜிஎஸ்டி (GST) பதிவுகள் உள்ளிட்ட நிர்வாகத் தரவுகளை மட்டுமே பயன்படுத்தி இந்தக் குறியீடு உருவாக்கப்பட்டுள்ளது.
- ஜிஎஸ்டி தரவு கிடைக்காத பட்சத்தில், நிர்வாகத் தரவு மற்றும் 'சேவைத்துறை நிறுவனங்களுக்கான வருடாந்திர கணக்கெடுப்பு' (ASISSE) ஆகியவற்றின் கலவை பயன்படுத்தப்படுகிறது.
- ISP என்பது ஒரு உற்பத்தி அளவீடு ஆகும்; எனவே, இதை மொத்த உள்நாட்டு உற்பத்தி (GDP) கணக்கீட்டில் பயன்படுத்தப்படும் 'மொத்த மதிப்பு கூட்டல்' (GVA) உடன் ஒப்பிடக் கூடாது.

- ஜிஎஸ்டி மற்றும் நிர்வாகத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டிருப்பதால், ISP தற்போது முறையான துறை சார்ந்த நிறுவனங்களை மட்டுமே உள்ளடக்கியுள்ளது.
- அதன்படி, ISP-ல் சேர்க்கப்படாத சேவைகள் என்பவை, அரசின் முக்கியச் செயல்பாடுகள் தொடர்பானவை அல்லது சந்தை சாராத செயல்பாடுகள் மற்றும் முறைசாராத் துறையின் ஆதிக்கம் கொண்டவையாகும். எனவே, இது சந்தை சாராத அரசு நடவடிக்கைகள், தனிப்பட்ட சேவைகள் மற்றும் முறைசாராத் துறை ஆகியவற்றை விலக்கி வைக்கிறது.
- நாட்டின் மொத்த மதிப்பு கூட்டலில் (GVA) பாதிக்கும் மேற்பட்ட பங்களிப்பைச் சேவைத் துறை வழங்குகிறது.
- ISP அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம், பொருளாதாரம் சார்ந்த சேவை, தொழில் மற்றும் விவசாயம் ஆகிய மூன்று முக்கியத் துறைகளுக்கும் இனி வழக்கமான மாதாந்திர அல்லது காலாண்டு உற்பத்திக் குறியீடுகள் கிடைக்கும்.




## உச்ச நீதிமன்ற (நீதிபதிகள் எண்ணிக்கை) திருத்த மசோதா, 2026




- உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையை 34 லிருந்து 38 ஆக உயர்த்துவதற்கான உச்ச நீதிமன்ற (நீதிபதிகள் எண்ணிக்கை) திருத்த மசோதா, 2026-ஐ மக்களவை நிறைவேற்றியது.
- இந்த மசோதா, இந்திய தலைமை நீதிபதியை (CJI) தவிர்த்து நீதிபதிகளின்

எண்ணிக்கையை 37 ஆக உயர்த்துகிறது.

- இது உச்ச நீதிமன்ற (நீதிபதிகள் எண்ணிக்கை) திருத்த அவசரச் சட்டம், 2026-க்கு மாற்றாக 2026 ஆம் ஆண்டு ஜூலை 20 அன்று மத்திய சட்டத் துறை அமைச்சர் அர்ஜுன் ராம் மேக்வால் அவர்களால் இம்மசோதா அறிமுகப்படுத்தப்பட்டது.
- நீதித்துறை திறனை மேம்படுத்துவதையும் உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கையை குறைப்பதையும் இந்த அதிகரிப்பு நோக்கமாகக் கொண்டுள்ளது.
- சட்டமியற்றுவதன் மூலம் உச்ச நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை மாற்றுவதற்கு நாடாளுமன்றத்திற்கு அதிகாரம் உள்ளது.

# சர்வதேசச் செய்திகள்

## பன்னாட்டு கடல்சார் பாதுகாப்பு கூட்டணி





- சமீபத்தில் சவூதி அரேபியாவும் மேலும் 13 நாடுகளும் ஒரு கடல்சார் பாதுகாப்பு கூட்டணியை நிறுவியுள்ளன.
- ரியாத்தில் நடைபெற்ற 'சவூதி அரேபியா + 13 நாடுகள் கூட்டணி' நிகழ்வில் இது தொடங்கப்பட்டது.
- சவூதி அரேபியா இந்தக் கூட்டணியை நிறுவிய மற்றும் வழி நடத்தும் நாடாக இருப்பதுடன், அதன் நிரந்தரத் தலைமையகமாகவும் செயல்படுகிறது.
- கடல்சார் பாதுகாப்பை மேம்படுத்துதல், கப்பல் போக்குவரத்தின் சுதந்திரத்தைப் பாதுகாத்தல், சர்வதேச வர்த்தகப் பாதைகள் மற்றும் எரிசக்தி விநியோக வழிகளைப் பாதுகாத்தல் ஆகியவற்றை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பாப் எல்-மண்டேப் நீரிணை, செங்கடல் மற்றும் ஏடன் வளைகுடாவில் பகிரப்பட்ட கடல்சார் நலன்களைப் பாதுகாப்பதே இதன் முக்கிய நோக்கமாகும்.
- சவூதி அரேபியா, குவைத், பஹ்ரைன், கத்தார், எகிப்து, ஜோர்டான், யேமன், நைஜீரியா, சூடான், ஜிபூட்டி, சோமாலியா மற்றும் பிற நாடுகள் இதன் நிறுவன உறுப்பினர்கள் ஆகும்.
- இதன் தன்மை முற்றிலும் தற்காப்பு சார்ந்ததாகவும், சர்வதேச சட்டம் மற்றும் இறையாண்மைக்கு இணக்கமானதாகவும் இருக்கும்.

- இது எந்தவொரு நாட்டையோ, கூட்டணியையோ அல்லது சர்வதேச அமைப்பையோ குறி வைக்காது.

# பொருளாதாரச் செய்திகள்

## காப்பீட்டு நிறுவன உரிமை விதிகள் - IRDAI

- இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (IRDAI) ஆனது, IRDAI (காப்பீட்டாளர்களின் பதிவு, மூலதன அமைப்பு, பங்குகள் பரிமாற்றம் மற்றும் ஒருங்கிணைப்பு) விதிமுறைகள், 2026-இல் திருத்தம் மேற்கொண்டுள்ளது.
- புதிய விதிகளின்படி, பங்கு இருப்பு 5%, 10%, 25%, 50% மற்றும் 75% வரம்புகளைத் தாண்டும்போது உரிமை மாற்றங்களுக்கு IRDAI-யிடம் முன் அனுமதி பெறுவது கட்டாயமாக்கப் பட்டுள்ளது.
- ஒரு முதலீட்டாளர் ஒரு காப்பீட்டு நிறுவனத்தின் தனிப்பெரும் பங்குதாரராக மாறும்போதும் இந்த அனுமதி தேவைப்படுகிறது.
- இந்த திருத்தங்கள் நேரடி மற்றும் மறைமுக பங்கு பரிமாற்றங்கள், விளம்பரதாரர்-குழு பரிமாற்றங்கள் மற்றும் புதிய பங்குகள் வெளியீடு மூலம் ஏற்படும் நீர்த்தல் ஆகியவற்றையும் உள்ளடக்கியுள்ளது.
- இந்தியாவின் காப்பீட்டுத் துறையை ஒழுங்குபடுத்துவதற்காக, காப்பீட்டு ஒழுங்கு முறை மற்றும் மேம்பாட்டு ஆணையச் சட்டம், 1999 இன் கீழ் IRDAI நிறுவப் பட்டது.




# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## ஹிரோஷிமா இடிபாடுகளில் புதிய உலோகக் கலவை கண்டுபிடிப்பு

- 1945 அணுபடிகுண்டு வெடிப்புக்குப் பிறகு உருவான, ஜப்பானின் ஹிரோஷிமா விரிகுடாவிலிருந்து மீட்கப்பட்ட கண்ணாடி போன்ற ஹிரோஷிமைட்டுகளுக்குள் முன்பு அறியப்படாத ஒரு புதிய உலோகக் கலவையை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.
- இந்த உலோகக் கலவையானது மணிகளுக்குள் ஒரு சிறிய உலோக தானியமாக காணப் படுகிறது. இதில் இரும்பு, குரோமியம், நிக்கல், மாங்கனீசு, மாலிப்டினம், சிலிக்கான் மற்றும் அலுமினியம் ஆகியவை உள்ளன.
- அணுவெடிப்பின் அதீத வெப்பம் மற்றும் விரைவான குளிர்ச்சி ஆகியவை ஒரு

தனித்துவமான கட்டமைப்பை உருவாக்கியதன் காரணமாக இது உருவாகி இருக்கலாம் என்று அறிவியலாளர்கள் நம்புகின்றனர்.


- இந்த உலோகக் கலவையானது, வலிமை மற்றும் நிலைத்தன்மைக்காக ஆய்வு செய்யப் படும் உயர்-எண்ட்ரோபி உலோகக் கலவைகள் (HEAs) மற்றும் குவாசி கிரிஸ்டல் /படிகங்களின் (quasicrystals) அம்சங்களை ஒத்திருக்கிறது.
- அணுக்கரு வெடிப்பின் துகள்கள், தீவிரமான இயற்பியல் மற்றும் வேதியியல் நிலைமைகள் குறித்த தகவல்களைப் பாதுகாக்க முடியும் என்பதை இந்தக் கண்டுபிடிப்பு காட்டுகிறது.




## கலப்பின காந்த-பாய்மவியல்மானி - ஐஐடி பாட்னா


- பீகாரில் உள்ள ஐஐடி பாட்னாவின் அறிவியலாளர்கள், காந்தப்-பாய்மவியல் (MR) பாய்மங்கள் மற்றும் திறன்மிகு பொருள் தொழில்நுட்பங்கள் குறித்த ஆராய்ச்சியை மேம்படுத்துவதற்காக ஒரு கலப்பின காந்த-பாய்மவியல்மானியை உருவாக்கி உள்ளனர்.
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் (DST) ஆதரவுடன் இந்தக் கருவி உருவாக்கப் பட்டது.
- இது, ஒருங்கிணைந்த அமுக்கம் மற்றும் வெட்டு விசை நிலைகளின் கீழ் MR பாய்மங்களின் பாய்வு, உருக்குலைவு, உராய்வு மற்றும் தேய்மானப் பண்புகளை அளவிட முடியும்.
- MR பாய்மங்கள் என்பவை, காந்தப்புலத்திற்கு உட்படுத்தப்படும் போது பாகுத் தன்மையை மாற்றிக்கொள்ளும் திறன்மிகு பொருட்கள் ஆகும். இவை பிரேக்குகள், கிளட்சுகள், அதிர்வு உறிஞ்சிகள், தணிப்பிகள், இயக்கிகள் மற்றும் மருத்துவக் கருவிகளில் பயன்படுத்தப்படுகின்றன.

❖ இந்தத் தொழில்நுட்பம், சுகாதாரம், விண்வெளி, பாதுகாப்பு மற்றும் தொழில்துறை தன்னியக்கம் ஆகியவற்றில் மேம்பட்ட பயன்பாடுகளை வடிவமைக்க உதவுகிறது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## குள்ள காட்டுப் பன்றி பாதுகாப்பு முன்னெடுப்பு




❖ தேசிய வனவிலங்கு வாரியத்தின் நிலைக்குழு (SC-NBWL), மத்திய பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மிகவும் அழிந்து வரும் உயிரினங்களின் பட்டியலில் குள்ள காட்டுப் பன்றியைச் சேர்க்கப் பரிந்துரை செய்துள்ளது.

❖ குள்ள காட்டுப் பன்றி (போர்குலா சால்வினியா) என்பது உலகின் மிகச்சிறிய மற்றும் அரிய காட்டுப் பன்றி இனமாகும் என்பதோடு முக்கியமாக அசாமின் புல்வெளிகளில் இது காணப் படுகிறது.

❖ சர்வதேச இயற்கைப் பாதுகாப்புச் சங்கம் (IUCN) தனது செந்நிறப் பட்டியலில் குள்ள காட்டுப் பன்றியை அருகி வரும் இனமாக அதிகாரப்பூர்வமாக வகைப்படுத்தியுள்ளது.

❖ இந்தப் பரிந்துரையானது, உயிரினங்களை மீட்டெடுப்பதற்கும் மற்றும் பாதுகாப்பு ஆதரவிற்காகவும் வனவிலங்கு வாழ்விடங்களின் ஒருங்கிணைந்த மேம்பாட்டு (IDWH) திட்டத்தின் கீழ் இந்த இனத்தைக் கொண்டுவரும்.

❖ இந்த உயிரினத்தை பாதுகாக்கும் முயற்சிகளை அசாமில் இருந்து ஜல்தாபாரா (மேற்கு வங்கம்) மற்றும் உத்தரப் பிரதேசத்தின் சில பகுதிகள் போன்ற பொருத்தமான

வாழ்விடங்களுக்கு விரிவுபடுத்த இந்திய வனவிலங்கு நிறுவனம் (WII) பரிந்துரைத்து உள்ளது.

## இந்தியாவின் புலி எண்ணிக்கை 2026





- உலகில் உள்ள மொத்த காட்டுப் புலிகளில் சுமார் 70 சதவீதத்தைக் கொண்டுள்ள இந்தியா, உலகின் மிகப்பெரிய காட்டுப் புலிகள் எண்ணிக்கையைக் கொண்ட நாடாகத் திகழ்கிறது.
- ராஜஸ்தானின் ஐந்து புலிகள் காப்பகங்களில் புலிகளின் எண்ணிக்கை 149-ஆக உயர்ந்துள்ளது; இதில் ரந்தம்பூர் காப்பகத்தில் மட்டும் 72 புலிகள் உள்ளன.
- புலிகளின் இனப்பெருக்கம் மற்றும் குட்டிகளின் உயிர்வாழும் விகிதம் ஆகியவற்றில், இந்தியாவின் மிகச் சிறந்த புலிகள் காப்பகங்களில் ஒன்றாக ரந்தம்பூர் விளங்குகிறது.
- ரந்தம்பூரில் புலிகளின் உயிர்வாழும் விகிதம் சுமார் 80 சதவீதமாக உள்ளது; இது நாட்டின் முக்கிய புலிகள் காப்பகங்களில் பதிவான மிக உயர்ந்த விகிதங்களில் ஒன்றாகும்.
- 2008-ஆம் ஆண்டில் சரிஸ்கா காப்பகம் தனது அனைத்துப் புலிகளையும் இழந்தபோது, ரந்தம்பூரைச் சேர்ந்த 'மச்லி' (Machli) என்ற பெண் புலியின் வழித்தோன்றல்களைக் கொண்டு அங்கு மீண்டும் புலிகள் குடியேற்றப்பட்டன.
- புலிகளை அறிவியல் பூர்வமாக ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு வெற்றிகரமாக மாற்றியமைத்த உலகின் முதல் நிகழ்வாக சரிஸ்கா புலிகள் காப்பகம் ஒரு வரலாற்றுச் சாதனையைப் படைத்தது.
- ஒரு காலத்தில் புலிகள் முற்றிலும் அழிந்துபோயிருந்த சரிஸ்கா காப்பகத்தில், தற்போது 53 புலிகள் வசிக்கின்றன.
- இது புலிகளை அறிவியல் பூர்வமாக மீண்டும் அறிமுகப்படுத்திய உலகின் முதல் வெற்றிகரமான முயற்சியாகக் கருதப்படுகிறது.
- இந்தியாவின் "புலிகள் மாநிலம்" (Tiger State) என்று அழைக்கப்படும் மத்தியப் பிரதேசத்தில், இந்த ஆண்டில் மட்டும் 45 புலிகள் உயிரிழந்துள்ளன; இது நாட்டின்

மொத்த உயிரிழப்புகளில் சுமார் 40 சதவீதமாகும்.

- 2022-ஆம் ஆண்டில் மத்தியப் பிரதேசம் அதிகபட்சமாக 785 புலிகளைக் கொண்டிருந்ததாகப் பதிவு செய்தது.
- 20 மாநிலங்களை உள்ளடக்கிய 'அகில இந்தியப் புலிகள் கணக்கெடுப்பு (2022)'-இன் படி, இந்தியாவில் புலிகளின் எண்ணிக்கை 3,682-ஆக உள்ளது.
- 'புலிகள் பாதுகாப்புத் திட்டம்' (Project Tiger), புலிகள் வாழும் 18 மாநிலங்களில் 58 புலிகள் காப்பகங்களைக் கொண்ட ஒரு கட்டமைப்பை உருவாக்கியுள்ளது.
- இக்காப்பகங்கள் சுமார் 84,500 சதுர கிலோமீட்டர் பரப்பளவைக் கொண்டுள்ளன; இது இந்தியாவின் மொத்தப் புவியியல் பரப்பளவில் சுமார் 2.56 சதவீதமாகும்.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## நீதித்துறை வெளிப்படைத்தன்மை குறியீட்டு அறிக்கை 2026




- விதி சட்டக் கொள்கை மையமானது, உச்ச நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றங்களின் அதிகாரப்பூர்வ இணையதளங்கள் வாயிலாக அவற்றின் வெளிப்படைத்தன்மையை மதிப்பிடும் நீதித்துறை வெளிப்படைத்தன்மை குறியீட்டு அறிக்கையை வெளியிட்டது.
- இந்தக் குறியீடானது 2025 ஆம் ஆண்டில் JALDI (இந்தியாவில் நீதி, அணுகல் மற்றும் தாமதங்களை குறைத்தல்) முன்னெடுப்பால் உருவாக்கப்பட்டது.
- நீதித்துறை செயல்முறைகள், நிறுவன ஆளுகை மற்றும் நிர்வாகம் மற்றும் நீதித்துறை / நிர்வாகப் பணியாளர்கள் ஆகிய மூன்று பிரிவுகளில் இது வெளிப்படைத்தன்மையை மதிப்பிடுகிறது.
- நீதிபதிகள் வழக்கில் இருந்து விலகுவதற்கான அளவுகோல்களை வெளியிடாமை, உச்ச நீதிமன்ற நேரடி ஒளிபரப்பு வழிகாட்டுதல்கள் இன்மை மற்றும் வரையறுக்கப் பட்ட பட்ஜெட் மற்றும் செலவு குறித்த வெளிப்படுத்தல்கள் போன்ற இடைவெளிகளை இந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.
- எந்தவொரு உயர் நீதிமன்றமும் அனைத்து நீதிபதிகளின் முழுமையான சொத்து

விவரங்களை வெளியிடவில்லை; சில உயர் நீதிமன்றங்களில் உள்ள ஒரு சில நீதிபதிகள் மட்டுமே சொத்துக்களை பகிரங்கமாக அறிவிக்கின்றனர்.

- வெளிப்படையான, அணுகக்கூடிய மற்றும் பொறுப்புள்ள நீதித்துறை நிறுவனங்களை ஊக்குவிப்பதை இந்த அறிக்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## பிங்கலி வெங்கய்யாவின் 150வது பிறந்தநாள்




- 2026 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 2 அன்று பிங்கலி வெங்கய்யாவின் 150-வது பிறந்தநாளை இந்தியா அனுசரித்தது என்பதோடுபிரதமர் அவருக்கு அஞ்சலி செலுத்தினார்.
- பிங்கலி வெங்கய்யா (1876-1963) ஒரு இந்திய சுதந்திரப் போராட்ட வீரர், கல்வியாளர், புவியியலாளர், எழுத்தாளர் மற்றும் இந்திய தேசியக் கொடியின் (மூவர்ணக் கொடி) ஆரம்ப வடிவத்தை வடிவமைத்தவர் ஆவார்.
- இவர் ஆந்திரப் பிரதேசத்தின் கிருஷ்ணா மாவட்டத்தில் உள்ள பட்லபெனுமர்ரு கிராமத்தில் பிறந்தார்.
- 1921 ஆம் ஆண்டில் விஜயவாடாவில் நடைபெற்ற அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி (AICC) கூட்டத்தொடரின் போது அவர் தனது கொடி வடிவமைப்பை மகாத்மா காந்தியிடம் சமர்ப்பித்தார்.
- 1923-ஆம் ஆண்டு ஏப்ரல் 13-ஆம் தேதி, நாக்பூரில் ஜாலியன் வாலாபாக் படுகொலையை நினைவு கூரும் வகையில் உள்ளூர் காங்கிரஸ் தொண்டர்கள் நடத்திய ஊர்வலத்தின் போது, ராட்டைச் சின்னம் பொறித்த 'சுயராஜ்யக் கொடி' ஏற்றப் பட்டது.
- வெங்கய்யாவின் வடிவமைப்பை அடிப்படையாகக் கொண்டு, ராட்டைக்கு (Charkha) பதிலாக அசோகச் சக்கரத்தை மாற்றி, இந்தியாவின் தற்போதைய தேசியக் கொடி ஆனது 1947 ஆம் ஆண்டு ஜூலை 22 அன்று அரசியல் நிர்ணய சபையால் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

- அப்போது, ராட்டைச் சின்னத்திற்குப் பதிலாக அடர் நீல நிறத்திலான 24 ஆரங்களைக் கொண்ட அசோகச் சக்கரம் அதில் இடம் பெறச் செய்யப் பட்டது.

# விளையாட்டுச் செய்திகள்

## காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள் 2026 - இந்தியா

- கிளாஸ்கோவில் நடைபெற்ற 2026 ஆம் ஆண்டிற்கான காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளில் (CWG) இந்தியா 39 பதக்கங்களுடன் (13 தங்கம், 17 வெள்ளி, 9 வெண்கலம்) 4-வது இடத்தைப் பிடித்தது.
- 1998 கோலாலம்பூர் காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளுக்குப் பிறகு, 24 ஆண்டுகளில் இந்தியா மிகக்குறைந்த பதக்கப் பட்டியலைப் பதிவு செய்தது. இருப்பினும் குறைக்கப்பட்ட போட்டி அட்டவணைக்கு மத்தியிலும் வலுவான நிலையை அடைந்துள்ளது.
- குத்துச்சண்டை, ஜூடோ, தடகளம், பாரா-தடகளம் மற்றும் பளுதூக்குதல் ஆகியவற்றில் இந்தியா சிறப்பாகச் செயல்பட்டு குத்துச்சண்டையில் 7 தங்கப் பதக்கங்கள் உட்பட 10 பதக்கங்களை வென்றுள்ளது.
- ஈட்டி எறிதலில் நீரஜ் சோப்ரா வெள்ளிப் பதக்கம் வென்றார்; அதேசமயம் மீராபாய் சானு பளுதூக்குதலில் தொடர்ந்து மூன்றாவது முறையாக காமன்வெல்த் தங்கப் பதக்கத்தை வென்றார்.
- ஆஸ்திரேலியா, இங்கிலாந்து மற்றும் கனடாவுக்கு அடுத்தபடியாக இந்தியா 4-வது இடத்தைப் பிடித்ததுடன், வெள்ளிப் பதக்கக் கணக்கீட்டின் அடிப்படையில் போட்டியை நடத்தும் நாடான ஸ்காட்லாந்தை விட முன்னிலைப் பெற்றது.



CWG GLASGOW 2026

| | | Gold | Silver | Bronze | Total |
|---|---|---|---|---|---|
| 1 | AUSTRALIA | 65 | 41 | 52 | 158 |
| 2 | ENGLAND | 26 | 40 | 65 | 101 |
| 3 | CANADA | 18 | 20 | 21 | 59 |
| 4 | INDIA | 13 | 17 | 09 | 39 |

*As of 03:05 AM, August 2, 2026

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★